Test Booklet No.
परीक्षा पुस्तिका संख्या

This Booklet contains **20** printed pages.
इस पुस्तिका में **20** मुद्रित पृष्ठ हैं ।

# MAK-23-I

**PAPER I / प्रश्न-पत्र I**
**PART IV & V / भाग IV & V**
**Tamil Language Supplement**
**तमिल भाषा परिशिष्ट**

Test Booklet Code
परीक्षा पुस्तिका कोड

**C**

**Do not open this Test Booklet until you are asked to do so.**
**इस परीक्षा पुस्तिका को तब तक न खोलें जब तक कहा न जाए ।**
**Read carefully the Instructions on the Back Cover (Page 19 & 20) of this Test Booklet.**
**इस परीक्षा पुस्तिका के पिछले आवरण (पृष्ठ 19 व 20) पर दिए गए निर्देशों को ध्यान से पढ़ें ।**

**For instructions in Tamil see Page 2 of this booklet.** / तमिल में निर्देशों के लिए इस पुस्तिका का पृष्ठ 2 देखें ।

## *INSTRUCTIONS FOR CANDIDATES*

1. This booklet is a supplement to the Main Test Booklet for those candidates who wish to answer **EITHER** Part IV (Language I) **OR** Part V (Language II) in **TAMIL** language, but **NOT BOTH**.
2. Candidates are required to answer Parts I, II, III from the Main Test Booklet and Parts IV and V from the languages chosen by them.
3. Questions on English and Hindi languages for Part IV and Part V have been given in the Main Test Booklet. Language Supplements can be asked for separately.
4. Use **Blue/Black Ball Point Pen only** for writing particulars on this page/marking responses in the Answer Sheet.
5. The CODE for this Language Booklet is **C**. Make sure that the CODE printed on **Side-2** of the Answer Sheet and on your Main Test Booklet is the same as that on this Language Supplement Booklet. In case of discrepancy, the candidate should immediately report the matter to the Invigilator for replacement of the Language Supplement Test Booklet.
6. This Test Booklet has **two** Parts, IV and V consisting of **60** Objective Type Questions, and each carries 1 mark :
   Part IV : Language I – (TAMIL) *(Q. Nos. 91 – 120)*
   Part V : Language II – (TAMIL) *(Q. Nos. 121 – 150)*
7. Part IV contains 30 questions for Language I and Part V contains 30 questions for Language II. In this Test Booklet, only questions pertaining to TAMIL language have been given. **In case the language(s) you have opted for as Language I and/or Language II is a language other than TAMIL, please ask for a Supplement (Language) Test Booklet of C Code that contains questions on that language. The languages being answered must tally with the languages opted for in your Application Form. No change in languages is allowed.**
8. **Candidates are required to attempt questions in Language II (Part V) in a language other than the one chosen as Language I (Part IV) from the list of languages.**
9. Rough work should be done only in the space provided in the Test Booklet for the same.
10. The answers are to be recorded on the OMR Answer Sheet only. Mark your responses carefully. No whitener is allowed for changing answers.

## *परीक्षार्थियों के लिए निर्देश*

1. यह पुस्तिका मुख्य परीक्षा पुस्तिका की एक परिशिष्ट है, उन परीक्षार्थियों के लिए जो **या** तो भाग IV (भाषा I) **या** भाग V (भाषा II) **तमिल** भाषा में देना चाहते हैं, लेकिन **दोनों नहीं** ।
2. परीक्षार्थी भाग I, II, III के उत्तर मुख्य परीक्षा पुस्तिका से दें और भाग IV व V के उत्तर उनके द्वारा चुनी भाषाओं से ।
3. अंग्रेज़ी व हिन्दी भाषा पर प्रश्न मुख्य परीक्षा पुस्तिका में भाग IV व भाग V के अन्तर्गत दिए गए हैं । भाषा परिशिष्टों को आप अलग से माँग सकते हैं ।
4. इस पृष्ठ पर विवरण अंकित करने एवं उत्तर पत्र पर निशान लगाने के लिए **केवल नीले/काले बॉल पॉइंट पेन** का प्रयोग करें ।
5. इस भाषा पुस्तिका का **कोड C** है । यह सुनिश्चित कर लें कि इस भाषा परिशिष्ट पुस्तिका का कोड, उत्तर पत्र के **पृष्ठ-2** एवं मुख्य प्रश्न पुस्तिका पर छपे कोड से मिलता है । अगर यह भिन्न हो तो परीक्षार्थी दूसरी भाषा परिशिष्ट परीक्षा पुस्तिका लेने के लिए निरीक्षक को तुरन्त अवगत कराएँ ।
6. इस परीक्षा पुस्तिका में **दो** भाग IV और V हैं, जिनमें **60** वस्तुनिष्ठ प्रश्न हैं, तथा प्रत्येक 1 अंक का है :
   भाग IV : भाषा I – (तमिल) *(प्रश्न सं. 91 – 120)*
   भाग V : भाषा II – (तमिल) *(प्रश्न सं. 121 – 150)*
7. भाग IV में भाषा I के लिए 30 प्रश्न और भाग V में भाषा II के लिए 30 प्रश्न दिए गए हैं । इस परीक्षा पुस्तिका में केवल तमिल भाषा से सम्बन्धित प्रश्न दिए गए हैं । **यदि भाषा I और/या भाषा II में आपके द्वारा चुनी गई भाषा(एँ) तमिल के अलावा है/हैं, तो कृपया C कोड वाली उस भाषा वाली परिशिष्ट (भाषा) परीक्षा पुस्तिका माँग लीजिए । जिन भाषाओं के प्रश्नों के उत्तर आप दे रहे हैं वह आवेदन पत्र में चुनी गई भाषाओं से अवश्य मेल खानी चाहिए । भाषाओं का परिवर्तन अनुमन्य नहीं है ।**
8. **परीक्षार्थी भाषा II (भाग V) के लिए, भाषा सूची से ऐसी भाषा चुनें जो उनके द्वारा भाषा I (भाग IV) में चुनी गई भाषा से भिन्न हो ।**
9. रफ कार्य परीक्षा पुस्तिका में इस प्रयोजन के लिए दी गई खाली जगह पर ही करें ।
10. सभी उत्तर केवल OMR उत्तर पत्र पर ही अंकित करें । अपने उत्तर ध्यानपूर्वक अंकित करें । उत्तर बदलने हेतु श्वेत रंजक का प्रयोग निषिद्ध है ।

Name of the Candidate (in Capital Letters) : ______________________
परीक्षार्थी का नाम (बड़े अक्षरों में) :

Roll Number (अनुक्रमांक) : in figures (अंकों में) ______________________

: in words (शब्दों में) ______________________

Centre of Examination (in Capital Letters) : ______________________
परीक्षा केन्द्र (बड़े अक्षरों में) :

Candidate's Signature : ______________ Invigilator's Signature : ______________
परीक्षार्थी के हस्ताक्षर : निरीक्षक के हस्ताक्षर :

Facsimile signature stamp of Centre Superintendent ______________________

இந்நூற்கட்டு 20 அச்சிடப்பட்ட பக்கங்கள் கொண்டது.

**MAK-23-I**

தேர்வு நூற்கட்டு

**சங்கேதக் குறியீடு**

**C**

# தாள் I

# பகுதி IV & V

# தமிழ் மொழி துணை நூற்கட்டு

**அவிழ்க்கச் சொல்லப்படும் வரை யாரும் இந்நூற்கட்டை அவிழ்க்கக் கூடாது.**

இந்நூற்கட்டின் பின்பக்க உறைப்பகுதியில் (பக்கம் 19 & 20) காணப்படும் வழிகாட்டுதல் குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும்.

***தேர்வு எழுதுவோர்க்கான வழிகாட்டுதல் குறிப்புகள் :***

1. இந்நூற்கட்டு முக்கிய தேர்வு நூற்கட்டுக்கான இணைப்பாகும். இது பகுதி IV (மொழி I) **அல்லது** பகுதி V க்கு (மொழி II) **தமிழ்** மொழியில் விடையளிக்க விரும்புவோர்க்கு மட்டுமே உரியது. **இரண்டிற்கும் உரியது அல்ல.**
2. தேர்வு எழுதுவோர் முக்கிய தேர்வு நூற்கட்டின் பகுதி I, II, III க்கும், அவர்கள் தேர்ந்தெடுத்த மொழிகளின் பகுதி IV, V ஆகியவற்றிற்கும் விடை அளிக்கவும்.
3. ஆங்கிலம் மற்றும் ஹிந்தி மொழிகளின் பகுதி IV மற்றும் பகுதி V ற்கான வினாக்கள் முக்கிய தேர்வு நூற்கட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. மொழி இணைப்பைத் தனியாக வாங்கிக் கொள்ள வேண்டும்.
4. இப்பக்கத்தில் வினவப்படும் உரிய விவரங்களை/விடைத்தாளில் நீர் மேற்கொள்ளும் பதில் வினையை **நீலம்/கறுப்பு மை பந்துருள் முனைப் பேனாவினால் மட்டும் நிரப்புக.**
5. இந்நூற்கட்டின் சங்கேதக் குறியீடு **C** ஆகும். இந்நூற்கட்டின் மீதும், இதன் **பக்கம் 2-லும்** அச்சாகி உள்ள சங்கேதக் குறியீடுகள் இரண்டும் ஒன்றே தானா என்பதைச் சரிபார்த்து உறுதி செய்து கொள்க. மேலும், உம் தேர்வு நூற்கட்டு எண்ணும், விடைத்தாள் எண்ணும் ஒன்றேதானா என்பதையும் சரிபார்த்து உறுதி செய்து கொள்க. இவை ஒன்றோடு ஒன்று முரணாக. இருக்குமேயானால், தேர்வு எழுதுபவர் இதுபற்றி உடனே தேர்வு மேற்பார்வையாளர் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும், வேறொரு தேர்வு நூற்கட்டு மற்றும் வேறொரு விடைத்தாள் ஆகிய இரண்டையும் அவற்றிற்குப் பதிலாகக் கேட்டுப் பெற வேண்டும்.
6. இத்தேர்வு நூற்கட்டு **2** பகுதிகள் கொண்டது. ஒரே ஒரு மதிப்பெண் நேரிய **60** பல்விடை வினாக்கள் கொண்ட இப்பகுதிகள் முறையே IV & V என்றவாறாக அமையும்.

   பகுதி IV : மொழி I — (தமிழ்) *(வினாக்கள் 91 முதல் 120 வரை)*

   பகுதி V : மொழி II — (தமிழ்) *(வினாக்கள் 121 முதல் 150 வரை)*
7. பகுதி IV இல் மொழி I க்கும், பகுதி V இல் மொழி II க்கும் தலா 30 வினாக்கள். இத்தேர்வு நூற்கட்டில் தமிழ் மொழிகளுக்குரிய வினாக்கள் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளன. இத்தேர்வு நூற்கட்டில் தமிழ் மொழிக்கான வினாக்கள் மட்டுமே உள்ளன. **தமிழ் மொழி நீங்கப் பிறமொழி எதனையேனும் மொழி I & II க்கு நீர் தெரிவு செய்திருப்பின் அம்மொழிக்குரிய வினாக்கள் கொண்ட துணை தேர்வு நூற்கட்டுடைய சந்தேக குறியீடு C-ஐ கேட்டுப் பெறவும். நீர் தேர்வு விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள மொழி தேர்ந்தெடுப்பும், தேர்வு நூற்கட்டில் எழுதியுள்ள விடை மொழியும் ஒன்றாகவே இருக்க வேண்டும். மொழிகளில் எந்த மாற்றமும் அனுமதிக்கப்படவில்லை.**
8. **தேர்வு எழுதுவோர், மொழிகள் பட்டியலிலிருந்து தேர்ந்து கொண்ட மொழி I (பகுதி IV இல்) நீங்கலாகப் பிற வேறொரு மொழியை மொழி II (பகுதி V க்கு) தேர்ந்து கொண்டு விடையளிக்க வேண்டும்.**
9. இத்தேர்வு நூற்கட்டில் ஒதுக்கப்பட்டுள்ள முன்வரைவுப் பகுதியில் மட்டும் திருந்தாப் பதிவுகள் இடம்பெற வேண்டும்.
10. ஒ.எம்.ஆர். (OMR) விடைத்தாளில் மட்டுமே விடைகள் பதிவு செய்யப்பட வேண்டும். பதில் வினைகளைக் கவனமாகப் பதிவு செய்க. விடைகளைத் திருத்தம் செய்து மாற்றி எழுத வெண்ணிற மை ஏதும் பயன்படுத்தக்கூடாது.

தேர்வு எழுதுபவர் பெயர் (தலைப்பு எழுத்துகளில்) : ____________________

தேர்வு வரிசை எண் : எண்ணில் ____________________

: எழுத்தில் ____________________

தேர்வு மையம் (தலைப்பு எழுத்துகளில்) : ____________________

தேர்வு எழுதுபவர் கையொப்பம் : ____________ தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம் : ____________

Facsimile signature stamp of Centre Superintendent ____________________

**தமிழை மொழிப்பாடம் I** ஆகத் தேர்வு செய்த தேர்வாளர்கள் மட்டுமே பின்வரும் பகுதியின் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

# பகுதி IV
# மொழிப்பாடம் I
# தமிழ்

**குறிப்பு :** *கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் கேள்விகளுக்கு (கேள்வி எண் 91 முதல் 99 வரை) மிகப் பொருத்தமான விடைகளைத் தேர்வு செய்க.*

இறந்தவர் உடலைப் பேழையில் வைத்துப் பூமியில் புதைத்துவிடுவது பழந்தமிழர் பண்பாடாகும். புதைவிடத்தின் மேல்பகுதியில் கற்களை வட்டமாக அடுக்கி வைப்பதும் உண்டு. இம்முறை புத்தர் இறப்பிற்குப் பிறகும் வழக்கிலிருந்தது. புத்தர் இறந்த பிறகு அவரது உடலை அடக்கம்செய்த இடத்தில் அமைக்கப்பட்ட கல்லறை வழிபாடு பௌத்தர்களிடம் ஸ்தூப வழிபாடாக மாறிற்று. இதுபோன்று மிக உயர்ந்த பௌத்த துறவிகளின் உடல்கள் அடக்கம் செய்யப்பட்டு அதன்மீதும் ஸ்தூபங்கள் எழுப்பப்பட்டன.

தமிழ் நாட்டில் காணப்பட்ட குத்துக்கல் அமைப்பு ஸ்தூப அமைப்போடு ஒப்பு நோக்கத்தக்கதாகும். சங்க இலக்கியங்கள் கூறும் தாழி அமைப்பும் தாழி புதைத்தல், பேழைகளோடு தொடர்புபடுத்தப்பட வேண்டும். தாழிகளில் புதைக்கப்பட்ட துறவிகளை 'கடவுள்' என்று குறிப்பிட்டப்பட்டுள்ளதும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

பௌத்தர்க்கு அடுத்து ஜைனர்களின் வளர்ச்சிக்கு ஆந்திர கர்நாடக அரசுகள் ஆதரவு அளித்த நிலையில் தமிழ்நாட்டுக் குகைத் தளங்களில் ஜைன தீர்த்தங்கரர் உருவங்கள், துறவிகள், இயக்கன், இயக்கி உருவங்கள் செதுக்கப் பட்டிருக்கின்றன.

குஷாணர்கள் பௌத்த மதத்தைப் போற்றியவர்கள். இவர்கள் காலத்தில் ஜலலாபாத், பாமியான் இடங்களில் இருப்பவை பௌத்தர் சான்றுகளாக உள்ளன. பாமியானில் கனிஷ்கர் காலத்துக்குப் பிறகான பல குகை விகாரங்கள் உள்ளன. அதே போன்று குப்தர் காலத்தில் பௌத்த குகைகளும் அமைக்கப்பட்டுள்ளன. அவுரங்காபாத், எல்லோரா, அஜந்தா, பாக் முதலிய இடங்களில் பௌத்த குகைகள் அமைக்கப்பட்டன.

**91.** இது பழந்தமிழர் பண்பாட்டில் இல்லை:

(1) புதைத்து கற்களை வட்டமாக அடுக்கி வைத்தல்

(2) தாழியில் புதைத்தல்

(3) அடக்கம் செய்தல்

(4) ஸ்தூபம் அமைப்பது

**92.** தாழியை __________ உடன் தொடர்பு படுத்த இயலும்.

(1) ஸ்தூபம்

(2) கல்லறை

(3) கடவுள்

(4) பேழை

**93.** இயக்கன், இயக்கி உருவங்கள் __________ தொடர்புடையது

(1) பௌத்தத்தோடு

(2) பழந்தமிழர் பண்பாடு

(3) ஸ்தூப வழிபாடு

(4) ஜைனத்தோடு

**94.** புதைத்தல் என்பதன் இலக்கணக்குறிப்பு

(1) பண்புப்பெயர்

(2) தொழிற்பெயர்

(3) பெயரெச்சம்

(4) வினையாலணையும் பெயர்

**95.** துறவிகளின் உடல்கள் அடக்கம் செய்யப்பட்டன – இது எவ்வகை வாக்கியம்

(1) செயப்பாட்டுவினை

(2) தன்வினை

(3) பிறவினை

(4) செய்வினை

**96.** ஆந்திர கர்நாடக அரசுகள் __________ஆதரவு அளித்தன.

(1) துறவிகளின் வளர்ச்சிக்கு

(2) பழந்தமிழர் வளர்ச்சிக்கு

(3) குஷாணர் வளர்ச்சிக்கு

(4) ஜைனர்களின் வளர்ச்சிக்கு

**97.** குப்தர் காலத்திய பௌத்தக் குகைகள் உள்ள இடம் _________ .

(1) பாமியான்

(2) எல்லோரா

(3) தமிழ்நாடு

(4) ஜலலாபாத்

**98.** தாழி என்பது __________ .

(1) குகைகள்

(2) இறந்தவர்கள் புதைப்பதற்கான கலம்

(3) புதைவிடத்தின் மேல்பகுதி

(4) கல்லறை

**99.** அஜந்தா குகைத்தளம் கட்டியவர்:

(1) ஆந்திரர்

(2) கருநாடகர்

(3) குப்தர்

(4) தமிழர்

***குறிப்பு :*** *கொடுக்கப்பட்டுள்ள கவிதையைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் கேள்விகளுக்கு (வினா எண் 100 முதல் 105 வரை) மிகப் பொருத்தமான விடைகளைத் தேர்வு செய்க.*

பூட்டிய வீட்டைத் திறந்து குடும்பப்
புகழ்விளக் கேற்றிடவே - சுடர்
தீட்டப் புகுந்த புதுமணப் பெண்ணனத்
தென்படும் வட்டநிலா – கண்
முன்படும் வட்டநிலா!

தன்னந் தனிமையில் பெண்வரும் சாயலில்
தத்தும் நடைநடந்தே – இரு
கன்னங் கனிந்திடக் காதல் பிறந்திடக்
காணுது வட்டநிலா – சற்று
நாணுது வட்டநிலா!

'ஓங்கு முகில்ரதம் ஏறி வருகின்ற
ஊர்வசி யேவருக!' - என
வேய்ங்குழல் கொண்டு வருகின்ற காதலை
வேண்டுது வட்டநிலா – மலை
தாண்டுது வட்டநிலா!

**100.** வட்டநிலா, இலக்கணம் காண்க:

(1) பண்புப் பெயர்

(2) உவமைத் தொகை

(3) தொழிற்பெயர்

(4) உம்மைத் தொகை

**101.** புதுமணப்பெண் என இது சொல்லப்படுகிறது:

(1) பூட்டிய வீடு

(2) சுடர்

(3) வட்டநிலா

(4) புகழ் விளக்கு

**102.** நிலவு இவ்வாறு வருகிறது:

(1) நாணத்துடன்

(2) பெண்ணின் சாயலில்

(3) கன்னம் கனிந்திட

(4) காதலுடன்

**103.** வேய்ங்குழல் கொண்டு வருவது:

(1) வட்டநிலா

(2) முகில்

(3) ஊர்வசி

(4) காதல்

**104.** முகில் ரதம் இலக்கணம் காண்க:

(1) எண்ணும்மை

(2) உருவகம்

(3) உம்மைத்தொகை

(4) உவமைத்தொகை

**105.** எதுகை அற்ற இணை:

(1) பூட்டிய – புகழ் விளக்கு

(2) காணுது – நாணுது

(3) வேண்டுது – தாண்டுது

(4) தென்படும் – முன்படும்

***குறிப்பு :*** *பின்வரும் கேள்விகளுக்கு (வினா எண் 106 முதல் 120 வரை) மிகப் பொருத்தமான விடைகளைத் தேர்வு செய்க.*

**106.** மூன்றாம் வகுப்பு ஆசிரியர் ஒருவர் மாணவர்களுக்கு புதிய சொற்களை அறிமுகப் படுத்துகிறார். புதிய சொல்திறனை வளர்க்க பின்வருவனவற்றில் திறனுடைய வழிமுறை எது ?

(1) சொற்களின் சுருக்கமான வரையறையை ஆசிரியர் அளிக்க வேண்டும்

(2) சொற்கள் இடம் பெறும் சூழலுக்கு ஏற்ப அவற்றின் பொருளை விளக்க ஆசிரியர் முயற்சி செய்ய வேண்டும்

(3) சொல்லின் பொருளைக் கரும்பலகையில் எழுதி மாணவர்கள் அதனை மனப்பாடம் செய்யச் சொல்வது

(4) சொற்களின் எதிர்ச் சொற்களை ஆசிரியர் கூறி மாணவர்களின் மொழியில் பொருள் விளக்குவது

**107.** ஒரு மொழியைக் கற்பதென்பது இதன் பாற்பட்டது :

(1) செயல்முறை

(2) உற்பத்தி

(3) திறன்

(4) தன்வயமாக்குதல்

**108.** எடுத்துக்காட்டுடன் பொருந்துகிற உத்திமுறையைத் தேர்ந்தெடுக்கவும்.

*'நான் பயன்படுத்தும் மொழியின் மீது கவனம் குவிக்கிறேன், எனெனில் அது சரியாக இருக்கிறது என்பதை உறுதி செய்ய வேண்டும்.'*

(1) மீள் பார்வை பார்த்தல்

(2) தன் மேற்பார்வை பார்த்தல்

(3) மொழியிலிருந்து மொழிக்கு

(4) மனனம் செய்தல்

**109.** இரண்டாம் வகுப்பு மாணவர்கள் 'காதைத்தொட்டு கையைத் தொட்டு கழுத்து முதல் கால்விரல்' என்று பாடுகிறார்கள். பாடலைப் பாடும் போதே அதற்கான உடல் அங்கங்களைத் தொட்டுக் காட்டுகிறார்கள். ஆசிரியர் எந்த கற்பித்தல் முறையை இங்கு பயன்படுத்துகிறார் ?

(1) கம்யுனிகேடிவ் லாங்குவேஜ் டீச்சிங்

(2) டோடல் பிஸிகல் ரெஸ்பான்ஸ்

(3) எலக்டிக்

(4) ஆடியோலிங்குவல்

**110.** வாசித்தலுக்கான வழிமுறைகள் :

A. உய்த்தறிதல்

B. அனுமானிக்கும் பாங்கு

C. பின்புலத்தின் வழி பொருளைக் கொண்டு கூட்டுதல்

D. கூர்ந்த வாசிப்பு

E. பாடப்பகுதியின் அமைப்பு முறையை அடையாளம் காணுதல்

வாசிப்பவர்கள் செய்வது:

i. எழுத்தாளர்கள் எழுதும் முறையைக் கொண்டு எழுத்தாளர்கள் உணர்வதைத் தீர்மானிக்கிறார்கள்

ii. எழுத்தின் ஒரு பகுதியைக் கொண்டு அறிமுகமற்ற சொற்களின் பொருளைப் புரிந்துக்கொள்கிறார்கள்

iii. தலைப்பு அல்லது அறிமுகத் தொடர்களைக் கவனித்து தகவல்கள் அமைக்கப்பட்டுள்ள முறையைத் தேடுகிறார்கள்

iv. ஒரு பாடப்பகுதியில் மொழி எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதில் கவனம் குவிக்கிறார்கள்

v. பாடப்பகுதி எதைப் பற்றியது என அறிய தலைப்புகள், படங்களைப் பயன்படுத்துகிறார்கள்

மேற்குறித்த வாசிப்பு முறையில் வாசகர்கள் செய்வது எவ்வகையானது என்பதைப் பற்றிய சரியான கருத்தைப் பின்வருவனவற்றில் பொருத்திக் காட்டுக :

(1) A-i, B-iv, C-v, D-ii, E-iii

(2) A-ii, B-i, C-iii, D-iv, E-v

(3) A-iv, B-iii, C-ii, D-i, E-v

(4) A-v, B-i, C-ii, D-iv, E-iii

**111.** முன்னால் அமைந்த பாடப்பகுதியில் இருந்து சொற்பொருள் சார்ந்த ஐந்து கேள்விகளுக்கு விடையளிக்க மாணவர்கள் குழுக்களாகப் பிரிந்து செயல்படுகிறார்கள். ஒரு குழுவினர் மற்ற குழுவினருடன் கேள்விகளைக் கேட்டு விடையளிக்கின்றனர். இது எந்த முறைக்கு எடுத்துக் காட்டாக உள்ளது.

(1) பின்னூட்டம்

(2) வாசித்தல் மதிப்பீடு

(3) ஒத்திசைந்த மதிப்பீடு

(4) தன் மதிப்பீடு

**112.** ஆசிரியர் ஒரு அட்டையில் ஒரு சொல் அல்லது தொடரை எழுதி என்னிடம் தருகிறார், நான் வகுப்பில் உள்ள மற்றவர்களுக்கு அதனை நடிப்பு வழி செய்து காட்டுகிறேன், இது எனக்குப் பிடித்திருக்கிறது. மாணவரின் மதிப்பீடு மற்றும் தேர்ந்தெடுப்பு இரண்டும் பொருந்தும் முறையைக் கண்டறிக.

(1) நான் கேட்கும் போது மொழியை நன்கு நினைவில் கொள்கிறேன்.

(2) அட்டையில் உள்ள தொடரை மனப்பாடம் செய்யும் போது மொழியை நன்கு நினைவில் கொள்கிறேன்.

(3) உடலியக்கத்துடன் ஈடுபடும் போது மொழியை நன்கு நினைவில் கொள்கிறேன்.

(4) நான் பார்க்கும் போது மொழியை நன்கு நினைவில் கொள்கிறேன்.

**113.** *முடிவுகோள் (மு) :*
பள்ளியில் சேரும் எல்லா குழந்தைகளும் அவர்களின் வயதுக்கு ஏற்ற மொழிப் பயன்பாட்டுத் திறன் கொண்டுள்ளனர்.
*காரணம் (கா) :*
மொழி மற்றும் பண்பாட்டுப்பன்மை காரணமாக அவர்கள் தமது திறனைப் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளனர்.
பின்வருவனற்றில் மிகப் பொருத்தமான விடையைத் தேர்வு செய்க.

(1) (மு) மற்றும் (கா) இரண்டும் உண்மை, (மு)வின் சரியான விளக்கமாக (கா) இல்லை

(2) (மு) சரி, (கா) தவறு

(3) (மு) தவறு, (கா) சரி

(4) (மு) மற்றும் (கா) இரண்டும் உண்மை, ( மு)வின் சரியான விளக்கம் (கா)

**114.** எழிலன் ஐந்தாம் வகுப்பு மாணவர், அவர் தன் ஆசிரியரிடம் ஒரு முறையிலும், தன் நண்பர்களுடன் வேறுமுறையிலும் இரண்டு வயது குழந்தை ஒருவரிடம் முற்றிலும் வேறு முறையிலும் பேசுகிறார். சமூகச் சூழலுக்கு ஏற்ப மொழியை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை அவர் அறிந்திருக்கிறார் என்பது இதன் பொருள். மொழியின் இந்தத் தன்மை எவ்வாறு அறியப்படுகிறது ?

(1) பொருண்மையியல் (செமாண்டிக்)

(2) பயன்பாட்டியல் (பிராக் மாட்டிக்)

(3) மொழிச் செயல்பாடு

(4) மொழி இயல்புத் தன்மை (நாச்சுரலிஸ்ட்)

**115.** தன் குடும்பத்தின் மூத்தோர் அல்லது உடன்பிறந்தோர் எப்போதும் பேசாதவற்றை தன் குழந்தை பேசுவதை ஒரு தாய் கவனிக்கிறார். அவருக்குக் குழப்பம் எற்படுகிறது, ஏனென்றால் குடும்பத்தில் உள்ளவர்களையும் போலச் செய்துதான் குழந்தை மொழியைக் கற்கிறாள் என்று அவர் நம்பியிருந்தார். அவருடைய நம்பிக்கை இத்துடன் பொருந்திப் போகிறது:

(1) நடத்தையியல் நிலை
(2) கட்டமைப்பியல் நிலை
(3) பன்மொழித்தன்மை நிலை
(4) பிறப்பிடச்சூழல் நிலை

**116.** குழந்தைகள் முறையான கல்வியைத் தொடங்கும் முன்பே சில திறமைகளை வளர்த்துக் கொள்கிறார்கள், இவை பிற்காலக் கல்வித்திறன்களுக்கு அடிப்படையாக அமைகின்றன, இத்திறமைகளை இவ்வாறு கூறலாம்:

(1) உருவாகும் பாடத்திட்டம்
(2) உருவாகும் பாடப்பொருள்கள்
(3) உருவாகும் எழுத்தறிவு
(4) உருவாகும் தீர்வுகள்

**117.** ஒரு பாட்டி கதைகளைப் படித்து குழந்தைகளைக் கவனிக்கச் செய்கிறார், இதன் வழியாக நூல்களைப் படித்து அவற்றின் புதிய கருத்துகளைப் புரிந்து கொள்ளும் செயல்முறையில் அவர்களைப் பங்கேற்கச் செய்கிறார். இந்த செய்முறை நுட்பம் இவ்வாறு அறியப்படுகிறது:

(1) பகிர்வு வாசிப்பு
(2) பரிமாற்ற வாசிப்பு
(3) உரத்த வாசிப்பு
(4) மாதிரி வாசிப்பு

**118.** எழுத்துகள், ஒலியன்களைக் கற்பித்து அவற்றை இணைப்பதன் வழியாக சொற்களை உருவாக்கக் கற்பிக்கும் ஒரு முறை:

(1) பாட்டம் அப் அணுகுமுறை
(2) மொழி முழுமை அணுகுமுறை
(3) அமைப்பியல் அணுகுமுறை
(4) டாப் டவுன் அணுகுமுறை

**119.** முடிவுகோள் (மு): ஒலியன் உச்சரிப்பு முறையைப் பயன்படுத்துவது சரியான உச்சரிப்புத் திறனைக் கற்பதை மந்தப்படுத்துகிறது.

காரணம் (கா): மரபான எழுத்து உச்சரிப்பைப் பயன்படுத்தாமல் குழந்தைகள் தாமே உருவாக்கும் எழுத்தொலிப்பைப் பயன்படுத்துவது அவர்களின் சரியான எழுத்தொலிப்புக்கு கற்றலை மந்தப் படுத்துவது இல்லை.

பின்வருவனவற்றில் சரியான இணைப்பைக் காண்க:

(1) (மு) மற்றும் (கா) இரண்டும் சரி, ஆனால் (மு) வின் சரியான விளக்கமல்ல (கா)
(2) (மு) சரி, ஆனால் (கா) தவறு
(3) (மு) தவறு, ஆனால் (கா) சரி
(4) (மு) மற்றும் (கா) இரண்டும் சரி, (மு) வின் சரியான விளக்கம் (கா)

**120.** மொழியின் தனித்தன்மை கொண்ட உச்சரிப்பு விதிகளின் காரணமாக புதிய மொழியைக் கற்கும் பல மாணவர்கள் பேசுவதற்குத் தயக்கம் காட்டுவது நிகழ்கிறது. இந்தச் சிக்கலைக் கையாள ஒரு வழிமுறை இது:

(1) பேச்சுவழி உறவாடல் கொண்ட மொழி விளையாட்டுகளை வகுப்பறையில் பயன்படுத்தல்
(2) ஆலோசகரின் வழிகாட்டுதலில் சிறப்பு பேச்சுச் சிகிச்சை நடத்தி தொடர் பயிற்சி வழி பழகுதல்
(3) பிழை நிகழும் போதே அவற்றைச் சரி செய்வது
(4) வகுப்பில் மாணவர்கள் குரல்விட்டு வாசித்தல்

**தமிழை மொழிப்பாடம் II** ஆகத் தேர்வு செய்த தேர்வாளர்கள் மட்டுமே பின்வரும் பகுதியின் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

# பகுதி V
# மொழிப்பாடம் II
# தமிழ்

**குறிப்பு :** *கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் கேள்விகளுக்கு (கேள்வி எண் 121 முதல் 128 வரை) மிகப் பொருத்தமான விடைகளைத் தேர்வு செய்க.*

சங்கப்பாடல்கள் வாய்மொழி இலக்கியத்திலிருந்து தோன்றி வளர்ந்து வரிவடிவம் பெற்றவை. தொன்மை மிக்க இலக்கியமெல்லாம் அத்தகையவே என்பது இன்று ஆய்வாளரால் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. ஹோமரின் கிரேக்க ஆதிகாவியங்கள் வாய்மொழி வழிப்பட்டவை என மேனாட்டறிஞர் பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். மேலும் இவையெல்லாம் போருங் காதலுமே பாடும் வீர நிலைகாத்தன எனவும் அவ்வீரநிலைக் காலப் பாட்டுகள் வாய்மொழிப் பாடல்களே எனவும் அறிஞர்கள் ஆராய்ந்து கூறியுள்ளனர். அவ்வகையில் சங்கப்பாடற்களிற் காணப்படும் பொருள், வடிவம், உத்திகள் பலவும் வாய்மொழிப் பண்பின எனலாம். சுட்டி ஒருவரது பெயர் கூறாமை, உலக வழக்கு நடை, வழக்குச் சொற்களை ஆளுதல். திரும்பத் திரும்ப வரும் அடைமொழிகளையும் தொடர்களையும் கருத்துக்களையும் உடையதாதல், ஒரு பொருள் மேல் மூன்றடுக்கிவருதல், ஆடலுடனும் இசையுடனும் கூடி வருதல் போல்வன பல சங்கப் பாடல்களின் வாய் மொழித் தன்மையை நிலை நாட்டும்.

உவமைகள் அமைந்துள்ள முறையும் ஒரு சிறப்பாகும். ஒரே பாடலில் பல உவமைகள் வருதலும் உண்டு. கல்பொருசிறு நுரையார், அணிலாடு முன்றிலார், தேய்புரிப் பழங்கயிற்றனார் போன்றன பல உவமையாலமைந்த புலவர் பெயர்களேயாகும். உவமை என்பது சங்கச் சான்றோர்க்கு வண்ணத்தூரிகையாகும். நாடு, நகர் ஊர்களையும் கூட மகளிர் அழகுக்கு உவமித்தல் ஒரு புதுமையாகும். "பிண்ட நெல்லின் அள்ளூர் அன்ன என் ஒண்தொடி நெகிழினும் நெகிழ்க" (அகம் 46 ) என அள்ளூர் நன்முல்லையார் உவமை கூறுதல் காண்க. மனைவி சொன்னபடி எல்லாம் கணவன் ஆடுகிறான் என்பதற்கு, கண்ணாடியில் தெரியும் தம் உருவம் நாம் கையைக் காலை அசைத்தால்தானும் அசைவது போல என வரும் உவமை சிறப்பானது. 'கையும் காலும் தூக்கத் தூக்கும் ஆடிப் பாவை போல, மேவன செய்யும் தன் புதல்வன் தாய்க்கே' (குறு.8) என்னும்போது, அதன் பொருத்தம் தோன்றி நகைச்சுவையை மிகுவிக்கிறது.

**121.** வாய்மொழி இலக்கியத்திலிருந்து வந்தது :

(1) இசை இலக்கியம்

(2) ஹோமரின் இலக்கியம்

(3) காதல் இலக்கியம்

(4) உவமை இலக்கியம்

**122.** வீர நிலைக்காலப் பாட்டுகளின் பாடுபொருள் :

(1) போர் மட்டும்

(2) போரும் வீரமும்

(3) போரும் காதலும்

(4) காதல் மட்டும்

**123.** சங்கப் பாடல்கள் வாய்மொழிப் பாடல்கள் என்பதற்கு __________ பொருந்தாது.

(1) திரும்பத் திரும்ப வரும் அடைமொழிகள்

(2) சுட்டி ஒருவரது பெயர் கூறாமை

(3) காதலைப் பாடுதல்

(4) ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வருதல்

**124.** உவமையால் அமையாத புலவர்:

(1) அணிலாடு முன்றிலார்

(2) ஆடிப்பாவையார்

(3) கல்பொரு சிறுநுரையார்

(4) தேய்புரிப் பழங்கயிற்றினார்

**125.** கையும் காலும்:

(1) பண்புத்தொகை

(2) உம்மைத்தொகை

(3) வினைத்தொகை

(4) எண்ணும்மை

**126.** தேய்புரி:

(1) வினையெச்சம்

(2) வினைத்தொகை

(3) பண்புப்பெயர்

(4) பெயரெச்சம்

**127.** சங்கச் சான்றோர்க்கு __________ வண்ணத்தூரிகை.

(1) உவமை

(2) வாய்மொழித்தன்மை

(3) உலகவழக்கு நடை

(4) அடைமொழி

**128.** 'ஒண்தொடி நெகிழினும் நெகிழ்க' என்று பாடியவர்

(1) அணிலாடு முன்றிலார்

(2) கல்பொரு சிறு நுரையார்

(3) தேய்புரிப் பழங்கயிற்றினார்

(4) அள்ளூர் நன்முல்லையார்

***குறிப்பு :*** *கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் கேள்விகளுக்கு (கேள்வி எண் 129 முதல் 135 வரை) மிகப் பொருத்தமான விடைகளைத் தேர்வு செய்க.*

சங்க இலக்கியம் பதிவு செய்துள்ள செய்திகளைக் கொண்டும் மேனாட்டார் குறிப்புகள், கல்வெட்டுகள், காசுகள், முத்திரைகள், தொல்பொருள்கள் போன்றவற்றின் துணை கொண்டும் காலவரையறை செய்துள்ளனர்.

புலவர் குழந்தை, மயிலை சீனி வேங்கடசாமி போன்றோர், சேரன் செங்குட்டுவன் கயவாகு காலத்தை அளவுகோலாக வைத்துப் பிற அரசர்களின் காலத்தைச் சுட்டிச்செல்வர்.

கே.என்.சிவராஜபிள்ளை, வி.கனகசபை போன்றோர் வேந்தர்களைத் 'தனித்தனியாகச்' சுட்டி ஒவ்வொருவரும் ஆண்ட காலத்தை முடிவு செய்து பட்டியலிட்டுள்ளனர்.

வெ. சு. சுப்பிரமணியாச்சாரியார், கரிகாலர் மூவர் என்று ஒரு நூல் எழுதியுள்ளார்.

மா. இராசமாணிக்கனார் சோழர் வரலாறு என்னும் நூலில் "முதற்கரிகாலன் ஏறத்தாழ இரண்டாம் கரிகாலனுக்கு இரண்டு தலைமுறை முற்பட்டவன் ஆவான்; ஆகவே அவர் காலம் ஏறத்தாழ கி.மு. 120 - கி.மு. 90 எனக் கொள்ளலாம். இரண்டாம் கரிகாலன் காலம் கி.மு. 60 – கி. மு. 10 ஆகும்" என்று முடிவுகட்டுகிறார். பத்துப்பாட்டு ஆராய்ச்சி என்னும் நூலில், "பரணர் ஏறத்தாழ கி.பி.75 முதல் 135 வரையில் புலவராய்த் திகழ்ந்தார் என்று கொள்ளலாம்" என்று புலவரின் காலத்தையும் சுட்டிச் செல்கிறார்.

பெருவிறற்கிள்ளியும் நெடுஞ்சேரலாதனும் கி.மு. 3 இல் போரிட்டதாக வேலாயுதம் மற்றும் சீனிவாசன் ஆகியோர் கருதுகின்றனர்.

சங்கப் புலவர்கள் இலக்கிய, இலக்கண அறிவோடு பிற துறைகளிலும் திறம் பெற்றவர்களாய் விளங்கினர். குறிப்பாகப் புலவர்களில் சிலர் வானியல் அறிவு மிகுந்தவர்களாய் விளங்கினர். உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்னும் புலவர் புறநானூற்றில், "செஞ்ஞாயிற்றுச் செலவும் அஞ்ஞாயிற்றுப் பரிப்பும் ( புறம் 30)" என்று தொடங்கும் பாடலிலே வான்மண்டல அமைப்பை கண்முன் காட்டுகிறார்.

தாமப்பல் கண்ணனார் என்னும் புலவர் ஓசோன் படலத்தை 'ஓசோன்' என்று சொல்லாமல், வானில் சூரியனோடு சுற்றிவரும் முனிவர்கள் என்கிறார். சூரியக் கதிர்களின் வெம்மையை வானில் உள்ள இம்முனிவர்கள் தாங்கிக் கொள்கின்றனர் என்கிறார்.

அறிவியலில் புனைந்துரைக்கு இடமேயில்லை. புலவர்கள் அறிவியலை – குறிப்பாக வானியல் நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளதால் 'சங்ககாலம்' பற்றித் துல்லியமாகக் கணித்துக் கூற முடிகிறது.

புறநானூற்றில் காணப்படும் சில வானியல் குறிப்புகள் சங்க காலத்தை நாள், மாதம், ஆண்டு என மிகச் சரியாகக் கணக்கிட உதவுகின்றன.

வால்நட்சத்திரத்தைப் பொதுவாக 'மீன்' என்றே அழைத்தனர். தூமகேது என்றும் வழங்கினர். "மைம்மீன் புகையினும் தூமம் தோன்றினும் " ( புறம் 117) என்று புறநானுறு அதனைச் சுட்டுகிறது.

தூமகேதுவினைக் காலம் காலமாகத் தமிழர்கள் கவனித்து வருகின்றனர். தூமகேது தோன்றினால் நற்சகுனமாகக் கொள்வதில்லை. தீமையின் அறிகுறியாக மக்கள் கருதுகின்றனர். இந்தத் தூமம் புகைக்கொடி என்றும் அழைக்கப்பெறும். "இது வட்டம், சிலை, நுட்பம், தூமம் என்னும் கரந்துறைகோட்கள் நான்கனுளொன்று; இதன் தோற்றம் உலகிற்குக் பெருந்தீங்கு விளைவிக்கும் என்பர்" என்று உ.வே.சா. குறிப்புரை எழுதுகின்றார்.

**129.** இரண்டாம் கரிகாலனுக்கு இரண்டு தலைமுறைகள் முற்பட்டவன் முதற்கரிகாலன் என்று சுட்டிய நூல் :

(1) பத்துப்பாட்டு ஆராய்ச்சி

(2) சோழர் வரலாறு

(3) பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சோழர் வரலாறு

(4) கரிகாலர் மூவர்

**130.** மா. இராசமாணிக்கனார் சுட்டும் பரணரின் காலம்

(1) கி.மு. 120 – கி.மு. 90

(2) கி.பி. 75 முதல் 135 வரை

(3) கி.மு 60 – கி. மு 10

(4) கி.மு. 3

**131.** காலத்தைத் துல்லியமாகக் கணிப்பதற்குப் பயன்படும் சங்கப் புலவர்களின் அறிவு :

(1) இலக்கிய அறிவு

(2) வானியல் அறிவு

(3) வானியல், இலக்கண அறிவு

(4) இலக்கண அறிவு

**132.** வரலாற்றுச் செய்திகளைப் பதிவு செய்துள்ள ஏட்டுச் சான்றுகள்:

(1) மேனாட்டார் குறிப்புகள், தொல்பொருள்கள்

(2) இலக்கியம், மேனாட்டார் குறிப்புகள்

(3) கல்வெட்டுகள், காசுகள்

(4) இலக்கியம், காசுகள்

**133.** மயிலை சீனி வேங்கடசாமி பிற அரசர்களின் காலத்தைச் சுட்ட அளவுகோலாகக் கொள்ளும் அரசர்கள் :

(1) சேரன் செங்குட்டுவன், கயவாகு

(2) கயவாகு, முதற்கரிகாலன்

(3) பெருவிற்கிள்ளி, நெடுஞ்சேரலாதன்

(4) சேரன் செங்குட்டுவன், கரிகாற்சோழன்

**134.** தாமப்பல் கண்ணனார் குறிப்பிடும் __________ கள் இங்கு __________ உடன் ஒப்பிடப்படுகின்றனர்.

(1) மனிதர், முனிவர்

(2) புலவர், ஓசோன் படலம்

(3) முனிவர், ஓசோன் படலம்

(4) அரசர், ஓசோன் படலம்

**135.** எதன் தோற்றம் உலகிற்குப் பெருந்தீங்கு விளைவிக்கும் என்பர்.

(1) தூமம்

(2) சிலை

(3) நுட்பம்

(4) வட்டம்

**குறிப்பு :** *பின்வரும் கேள்விகளுக்கு (வினா எண் 136 முதல் 150 வரை) மிகப்பொருத்தமான விடைகளைத் தேர்வு செய்க.*

**136.** சொற்கள் அமையும் பின்புலத்தைக் கொண்டு அவற்றின் பொருளைப் புரிந்து கொள்வதற்கு அழுத்தம் தரும் ஒரு கற்பித்தல் முறை :

(1) பாட்டம் அப் அணுகுமுறை

(2) மொழி முழுமை அணுகுமுறை

(3) அமைப்பியல் அணுகுமுறை

(4) கம்யூனிகேடிவ் அணுகுமுறை

**137.** மொழி பற்றிப் பேசவும் சிந்திக்கவுமான அறிவுத் திறன் :

(1) திறனுள்ள பேச்சாளர்

(2) உருவாக்க எழுத்தறிவு

(3) மெட்டாலிங்குஸ்டிக் அறிவுத்திறன்

(4) ஒலியனியல் அறிவு

**138.** வீட்டில் உள்ள பெரியவர்கள், உடன்பிறந்தோர் யாரும் பேசாதவற்றை இரண்டாம் வகுப்பு பிள்ளை ஒன்று பேசுவதை கவனித்த தாய் ஒருவர் ஆசிரியரிடம் கேட்கிறார். இது எப்படி சாத்தியம்? இக்கேள்விக்குப் பொருத்தமான விடை எது ?

(1) மொழிக்கற்றல் மனித மூளையின் உள்ளார்ந்த இணைப்பில் உள்ளது.

(2) நாம் மீண்டும் மீண்டும் சொல்லிக் காட்டுவதன் வழியாக குழந்தை மொழியைக் கற்றுக் கொள்கிறது.

(3) கட்டமைப்பு அணுகுமுறையின்படி குழந்தைகள் புதிய மொழிகளைத் தாமே உருவாக்கிக் கொள்ள முடியும்

(4) பெரியவர்கள் பேசுவதைப் போலச் செய்வதன் வழிதான் குழந்தை மொழி கற்கிறது.

**139.** ஒரு வளர்ந்தவர், ஒரு குழந்தை இருவரும் ஒரு புத்தகத்தை ஒன்றாகப் பார்க்கிறார்கள், வளர்ந்தவர் கேள்வி கேட்க குழந்தை முதலில் பதில் சொல்கிறது, பிறகு குழந்தை கேள்வி கேட்க பெரியவர் பதில் சொல்கிறார், இவ்வகை உரையாடல் முறை :

(1) பரிமாற்ற வாசிப்பு

(2) டயலாஜிக் வாசிப்பு

(3) கதை சொல்லுதல்

(4) மாடல் வகை வாசிப்பு

**140.** மொழி கற்கும் மாணவர்களிடம் கவனித்தறிதல் திறனை வளர்க்க ஒரு ஆசிரியர் செய்யக் கூடியது :

(1) மொழியின் மற்ற திறன்களுக்கு முக்கியத்துவம் தராமல் இருப்பது

(2) வெவ்வேறு சூழலில் வெவ்வேறு மனிதர்களுடன் பேசும் வாய்ப்பை ஏற்படுத்திக் கவனிக்கச் செய்தல்.

(3) தாங்கள் கேட்கும் அனைத்தையும் முழுமையாகக் கவனிப்பது.

(4) வகுப்பறைக்கு உள்ளும் வெளியும் தொடர்ச்சியாக பேசிக் கொண்டிருப்பது

**141.** *முடிவுகோள் (மு) :*
தொடக்கக் கல்வியில் மொழியின் முழுத்தெளிவுநிலை மிகமிக முதன்மையானது.
*காரணம் (கா) :*
தொடக்கக் கல்வித்திட்டத்தில் இலக்கணம் உள்ளார்ந்த ஒரு பகுதி.
பின்வருவனற்றில் சரியானதைத் தேர்க :

(1) (மு) மற்றும் (கா) இரண்டும் சரி, (மு)வின் தவறான விளக்கம் (கா)

(2) (மு) சரி, (கா) தவறு

(3) (மு) தவறு, (கா) சரி

(4) (மு) மற்றும் (கா) இரண்டும் சரி, (கா) ஆனது (மு)வின் சரியான விளக்கமாக உள்ளது.

**142.** மொழியின் இயல்பு பற்றிய நம்பிக்கைகள், கோட்பாட்டு நிலைப்பாடுகள், மொழி கற்றலின் இயல்புகள், இவை கற்பித்தல் - கற்றலில் பொருந்திவரும் முறைகள் :

(1) பாடப்பொருளடக்கம்

(2) பாட அணுகுமுறை

(3) பாடத் தொழில்நுட்பம்

(4) பாடத்திட்டம்

**143.** உருவாக்க நிலை மதிப்பீடு என்பது :

(1) வளர்ச்சி மற்றும் மேம்பாட்டின் போக்கில் தொடர்புடையது

(2) பாடநிலையின் ஒரு குறிப்பிட்ட கட்டம் அல்லது முன் குறிக்கப்பட்ட நிலையில் செய்யப்படுகிறது

(3) மாற்றத்துக்கு உரியதல்ல

(4) கற்பித்தல் – கற்றல் செயல்பாட்டில் நிகழ்பவை

**144.** மாணவர்களுக்கான பாடத்திட்டம் தயாரிக்கும்போது முழு உடல் புலனுறுப்பு உறவாடல் முறைக்கு (டிபிஆர்) முக்கியத்துவம் தர முடிவு செய்திருக்கிறார். பின்வருவனவற்றில் எந்த முறை அதற்கு பொருத்தமுடையதாக இருக்கும் ?

(1) மாணவர்கள் இருக்கையில் அமர்ந்து, இருவராகவோ குழுவாகவோ செயல்படுதல்

(2) வகுப்பறையில் சில கவனித்தல் செயல்பாட்டை இணைத்தல்

(3) செயல்பாடுகளை நிறுத்திவிட்டு கேள்விகேட்டு பதில் சொல்ல ஊக்குவித்தல்

(4) வகுப்பறையில் மாணவர்களிடம் உடல்சார் நடவடிக்கை நிகழ்வதை உறுதிப்படுத்துதல்

**145.** இலக்கணம் பற்றிய அணுகுமுறையில், மொழி விதிகளைக் கற்பதுதான் ஒருமொழியைக் கற்பது என்ற நம்பிக்கையை ஊக்கப்படுத்தும் அணுகுமுறை எது ?

(1) இண்டக்டிவ்

(2) கம்யூனிகேடிவ்

(3) இலக்கண மொழிபெயர்ப்பு

(4) டிடக்டிவ்

**146.** ஐந்தாம் வகுப்பு ஆசிரியர் ஒருவர் மாணவர்களுக்கு விரும்பியதை எழுதும் பயிற்சிச் செயலைத் தர திட்டமிடுகிறார். எதற்கு அவர் அதிக முக்கியத்துவம் தர வேண்டும் ?

(1) உள்ளடக்கத்தில் சரளத்தன்மை

(2) முழுத்தெளிவு, சரளத்தன்மை இரண்டுக்கும் முக்கியத்துவம்

(3) மாணவர்களின் கையெழுத்து

(4) உள்ளடக்கத்தில் முழுத்தெளிவு

**147.** டாப் டவுன் என்பது "முழுமையான அர்த்தத்திற்கு கவனம் தருதல் ", "பாட்டம் அப்" என்றால் என்ன ?

(1) வாசித்தலுக்கான முன்னேற்பாட்டில் கவனம் குவித்தல்

(2) பாடப்பகுதியின் சொற்கள், தொடர்களில் கவனம் குவித்தல்

(3) சுருக்கமான விடைக்குறிய கேள்விகளில் கவனம் குவித்தல்

(4) பாடப்பகுதியின் சுருக்கம் மற்றும் கருத்துக் சுருக்கம் இரண்டிலும் கவனம் குவித்தல்

**148.** மொழி கற்பிக்கும் ஆசிரியரின் முதன்மைப் பொறுப்பு எது ?

(1) கற்பித்தலுக்குப் பொருத்தமான உள்ளடக்கத்தைத் தேர்வு செய்தல்

(2) வெவ்வெறு வகுப்புகளாக மாணவர்களை பிரித்து அமைத்தல்

(3) மாணவர்களுக்கு வகுப்புரை தருதல்

(4) மாணவர்களின் மொழித்திறன் அளவை அடையாளம் காணுதல்

**149.** ஒரு குழந்தை புத்தகம் ஒன்றை எடுத்து பின்னட்டையில் இருந்து திருப்பி, பக்கங்களைப் புரட்டிச்செல்கிறது. இதில் உள்ள தன்மை.

(1) எமர்ஜென்ட் கரிகுலம்

(2) எமர்ஜென்ட் பிராப்பர்டி

(3) எமர்ஜென்ட் ஸொல்யூஸ்ஷன் ஸ்கில்ஸ்

(4) எமர்ஜென்ட் லிட்ரஸி ஸ்கில்ஸ்

**150.** *முடிவுகோள் (மு) :*

குழந்தைகளிடம் மொழித் தன்வயப்படுத்தல் மரபணு வழி முன்பதிவாகி இருக்கிறது, சுற்றுச்சூழல் இதில் எந்தப் பங்கும் வகிப்பதில்லை.

*காரணம் (கா) :*

கற்போரை மையமாகக் கொண்ட வகுப்பறைச் சூழல் மொழித் தன்வயப்படுத்தலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

பின்வருவனற்றில் மிகப் பொருத்தமான விடையைத் தேர்வு செய்க.

(1) (மு) மற்றும் (கா) இரண்டும் சரி, (மு)வின் சரியான விளக்கமாக (கா) இல்லை

(2) (மு) சரி, (கா) தவறு

(3) (மு) தவறு, (கா) சரி

(4) (மு) மற்றும் (கா) இரண்டும் சரி, (மு)வின் சரியான விளக்கமாக (கா) உள்ளது

# SPACE FOR ROUGH WORK

# SPACE FOR ROUGH WORK

## கீழ்வரும் வழிகாட்டுதல் குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும் :

1. வெவ்வேறு கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டிய விதம் டெஸ்ட் கையேட்டில் விளக்கப்பட்டுள்ளது. இது கேள்விகளுக்கு உண்மையில் பதிலளிக்கும் முன் நீங்கள் கவனமாக படிக்க வேண்டும்.
2. பக்கம் 2-இல் ஓ.எம்.ஆர். (OMR) விடைத்தாளில் உள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய நான்கு விடைகளில் மிகச் சரியான ஒரு விடையை மட்டும் நீலம் / கறுப்புமை பந்துருள் முனைப் பேனாவினால் முழுவதுமாக மைபட்டை தீட்டப்பட வேண்டும்.
3. தேர்வு எழுதுபவர் அவர்தம் விடைத்தாள் மடிந்திருக்கவில்லை என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். விடைத் தாளில் எவ்விதமான அடித்தல் திருத்தலும் செய்தல் கூடாது. விடைத்தாளில் உரிய இடத்தில் மட்டுமன்றிப் பிற எங்கும் தேர்வு வரிசை எண்ணைக் குறிப்பிடக் கூடாது.
4. எச்சூழ்நிலையிலும் (தேர்வு நூற்கட்டு சங்கேதக் குறியீடு / எண்ணும் தேர்வு விடைத்தாள் குறியீடு/எண்ணும் தம்முள் முரண்படும் நிலையில் மட்டுமன்றி) தேர்வு எழுதுபவருக்கு வேறொரு விடைத்தாள் இணை அளிக்கப்படாது. ஆகவே தேர்வு நூற்கட்டையும் விடைத்தாளையும் தேர்வு எழுதுபவர் மிகவும் கவனமாகக் கையாள வேண்டும்.
5. தேர்வு எழுதுபவர் தேர்வு வருகைத் தாளில் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள தேர்வு நூற்கட்டு மற்றும் விடைத்தாள் குறியீடு எண்களை சரியாகப் பதிவு செய்ய வேண்டும்.
6. ஒரு இயந்திரம் ஓ.எம்.ஆர். (OMR) விடைத்தாளில் குறியிடப்பட்ட தகவல்களைப் படிக்கும் எனவே எந்த தகவலும் முழுமையடையாமல் இருக்க கூடாது. அதேபோல் அட்மிட் கார்டில் கொடுக்கப்பட்ட தகவல்களிலிருந்து வேறுபட்டதாக இருக்கக்கூடாது.
7. தேர்வு எழுத அனுமதி அட்டை தவிர மற்றபடி அச்சு/கையெழுத்துக் குறிப்புகள், துணுக்குகள், பேஜர், செல்போன், மின்சாதனம் எதனையும் தேர்வுக் கூடத்திற்குள் தேர்வு எழுதுவோர் கொண்டு செல்லக் கூடாது.
8. மொபைல் போன்கள், வயர்லெஸ் தகவல்தொடர்பு சாதனங்கள் (சுவிட்ச் ஆஃப் பயன்முறையில் கூட) மற்றும் தடைசெய்யப்பட்ட பிற பொருட்களை தேர்வு அரங்குகள் / அறைகளில் கொண்டு வரக் கூடாது. இந்த அறிவறித்தலுக்கு இணங்கத் தவறினால், தேர்வில் நியாயமற்ற வழிகளைப் பயன்படுத்துவதாகக் கருதப்படும், மேலும் தேர்வை ரத்து செய்வது உட்பட வேட்பாளருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.
9. தேர்வுக் மேற்பார்வையாளர் வினவும் போது தேர்வு எழுதுபவர் தம் அனுமதி அட்டையைக் காண்பிக்க வேண்டும்.
10. தேர்வு கண்காணிப்பாளர் / தேர்வு மேற்பார்வையாளர் சிறப்பு அனுமதியின்றித் தேர்வு எழுதுபவர் தம் இருக்கையிலிருந்து வெளியேறக் கூடாது.
11. தேர்வு மையத்திற்குள் நுழைதல், தேர்வு மையத்திலிருந்து/அறையிலிருந்து வெளியேறுதல் ஆகிய இரு வேளையிலும் தேர்வு வருகைப் பதிவுத் தாளில் கையொப்பம் இடாமலும், விடைத்தாளை மேற்பார்வையாளரிடம் திருப்பி அளிக்காமலும் வெளியேறக் கூடாது. வெளியேறுகையில் வருகைப் பதிவுத் தாளில் கையொப்பம் இடாத தேர்வு எழுதுபவரின் விடைத்தாள் திருப்பி அளிக்கப்படாததாகக் கருதப்படும். **இந்த முறை மீறிய செயலுக்கு உரிய எதிர்வினை மேற்கொள்ளப்படும்.**
12. மின் இயங்கு/மின் இயங்காக் கணிப்பான்களுக்கு அனுமதி இல்லை.
13. தேர்வு ஆணையத்தின் அனைத்து விதமான நடத்தை விதிமுறைகளுக்கும் தேர்வு எழுதுபவர் தேர்வு மையத்தில்/தேர்வு அறையில் கட்டுப்படுவது கட்டாயம். முறை மீறிய செயல்கள் மீது தேர்வாணையத்தின் விதிமுறைகள் படி நடவடிக்கை எடுக்கப்படும்.
14. எச்சூழலிலும் தேர்வு நூற்கட்டும் விடைத்தாளும் தனித்தனியே பிரிக்கப்படக் கூடாது.
15. **தேர்வு எழுதி முடித்த பின் தேர்வு எழுதுபவர் தம் விடைத்தாளை மேற்பார்வையாளரிடம் திருப்பி அளிக்க வேண்டும்.** ***தேர்வு எழுதுவோர் இத்தேர்வு நூற்கட்டை உடன் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.***

**READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY :**

1. The manner in which the different questions are to be answered has been explained in the Test Booklet which you should read carefully before actually answering the questions.
2. Out of the four alternatives for each question, only one circle for the correct answer is to be darkened completely with **Blue/Black Ball Point Pen** on **Side-2** of the OMR Answer Sheet. The answer once marked is not liable to be changed.
3. The candidates should ensure that the Answer Sheet is not folded. Do not make any stray marks on the Answer Sheet. Do not write your Roll No. anywhere else except in the specified space in the Answer Sheet.
4. Handle the Test Booklet and Answer Sheet with care, as under no circumstances (except for discrepancy in Test Booklet Code or Number and Answer Sheet Code or Number), another set will be provided.
5. The candidates will write the correct Test Booklet Code and Number as given in the Test Booklet/Answer Sheet in the Attendance Sheet.
6. A machine will read the coded information in the OMR Answer Sheet. Hence, no information should be left incomplete and it should not be different from the information given in the Admit Card.
7. Candidates are not allowed to carry any textual material, printed or written, bits of papers, pager, mobile phone, electronic device or any other material except the Admit Card inside the Examination Hall/Room.
8. Mobile phones, wireless communication devices (even in switched off mode) and the other banned items should not be brought in the examination halls/rooms. Failing to comply with this instruction, will be considered as using unfair means in the examination and action will be taken against the candidate including cancellation of examination.
9. Each candidate must show on demand his / her Admit Card to the Invigilator.
10. No candidate, without special permission of the Centre Superintendent or Invigilator, should leave his / her seat.
11. The candidates should not leave the Examination Hall/Room without handing over their Answer Sheet to the Invigilator on duty and sign the Attendance Sheet twice. Cases where candidate has not signed the Attendance Sheet second time will be deemed not to have handed over the Answer Sheet and dealt with as an unfair means case. **The candidates are also required to put their left-hand THUMB impression in the space provided in the Attendance Sheet.**
12. Use of Electronic/Manual Calculator is prohibited.
13. The candidates are governed by all Rules and Regulations of the Examining Body with regard to their conduct in the Examination Hall/Room. All cases of unfair means will be dealt with as per Rules and Regulations of the Examining Body.
14. No part of the Test Booklet and Answer Sheet shall be detached under any circumstances.
15. **On completion of the test, the candidate must hand over the Answer Sheet to the Invigilator in the Room/Hall.** ***The candidates are allowed to take away this Test Booklet with them.***

**निम्नलिखित निर्देशों को ध्यान से पढ़ें :**

1. जिस प्रकार से विभिन्न प्रश्नों के उत्तर दिए जाने हैं उसका वर्णन परीक्षा पुस्तिका में किया गया है, जिसे आप प्रश्नों का उत्तर देने से पहले ध्यान से पढ़ लें ।
2. प्रत्येक प्रश्न के लिए दिए गए चार विकल्पों में से सही उत्तर के लिए OMR उत्तर पत्र के **पृष्ठ-2** पर केवल एक वृत्त को ही पूरी तरह **नीले/काले बॉल पॉइन्ट पेन** से भरें । एक बार उत्तर अंकित करने के बाद उसे बदला नहीं जा सकता है ।
3. परीक्षार्थी सुनिश्चित करें कि इस उत्तर पत्र को मोड़ा न जाए एवं उस पर कोई अन्य निशान न लगाएँ । परीक्षार्थी अपना अनुक्रमांक उत्तर पत्र में निर्धारित स्थान के अतिरिक्त अन्यत्र न लिखें ।
4. परीक्षा पुस्तिका एवं उत्तर पत्र का ध्यानपूर्वक प्रयोग करें, क्योंकि किसी भी परिस्थिति में (केवल परीक्षा पुस्तिका एवं उत्तर पत्र के कोड या संख्या में भिन्नता की स्थिति को छोड़कर) दूसरी परीक्षा पुस्तिका उपलब्ध नहीं करायी जाएगी ।
5. परीक्षा पुस्तिका/उत्तर पत्र में दिए गए परीक्षा पुस्तिका कोड व संख्या को परीक्षार्थी सही तरीके से उपस्थिति-पत्र में लिखें ।
6. OMR उत्तर पत्र में कोडित जानकारी को एक मशीन पढ़ेगी । इसलिए कोई भी सूचना अधूरी न छोड़ें और यह प्रवेश पत्र में दी गई सूचना से भिन्न नहीं होनी चाहिए ।
7. परीक्षार्थी द्वारा परीक्षा हॉल/कक्ष में प्रवेश पत्र के सिवाय किसी प्रकार की पाठ्य सामग्री, मुद्रित या हस्तलिखित, काग़ज़ की पर्चियाँ, पेजर, मोबाइल फोन, इलेक्ट्रॉनिक उपकरण या किसी अन्य प्रकार की सामग्री को ले जाने या उपयोग करने की अनुमति नहीं है ।
8. मोबाइल फोन, बेतार संचार युक्तियाँ (स्विच ऑफ अवस्था में भी) और अन्य प्रतिबंधित वस्तुएँ परीक्षा हॉल/कक्ष में नहीं लाई जानी चाहिए । इस सूचना का पालन न होने पर इसे परीक्षा में अनुचित साधनों का प्रयोग माना जाएगा और परीक्षार्थी के विरुद्ध कार्यवाही की जाएगी, परीक्षा रद्द करने सहित ।
9. पूछे जाने पर प्रत्येक परीक्षार्थी, निरीक्षक को अपना प्रवेश-पत्र दिखाएँ ।
10. केन्द्र अधीक्षक या निरीक्षक की विशेष अनुमति के बिना कोई परीक्षार्थी अपना स्थान न छोड़ें ।
11. कार्यरत निरीक्षक को अपना उत्तर पत्र दिए बिना एवं उपस्थिति-पत्र पर दुबारा हस्ताक्षर किए बिना परीक्षार्थी परीक्षा हॉल/कक्ष नहीं छोड़ेंगे । यदि किसी परीक्षार्थी ने दूसरी बार उपस्थिति-पत्र पर हस्ताक्षर नहीं किए तो यह माना जाएगा कि उसने उत्तर पत्र नहीं लौटाया है और यह अनुचित साधन का मामला माना जाएगा । **परीक्षार्थी अपने बाएँ हाथ के अँगूठे का निशान उपस्थिति-पत्र में दिए गए स्थान पर अवश्य लगाएँ ।**
12. इलेक्ट्रॉनिक/हस्तचालित परिकलक का उपयोग वर्जित है ।
13. परीक्षा-हॉल/कक्ष में आचरण के लिए परीक्षार्थी परीक्षण संस्था के सभी नियमों एवं विनियमों द्वारा नियमित हैं । अनुचित साधनों के सभी मामलों का फैसला परीक्षण संस्था के नियमों एवं विनियमों के अनुसार होगा ।
14. किसी भी परिस्थिति में परीक्षा पुस्तिका और उत्तर पत्र का कोई भाग अलग न करें ।
15. **परीक्षा सम्पन्न होने पर, परीक्षार्थी कक्ष/हॉल छोड़ने से पूर्व उत्तर पत्र निरीक्षक को अवश्य सौंप दें ।** ***परीक्षार्थी अपने साथ इस परीक्षा पुस्तिका को ले जा सकते हैं ।***